


திருவள்ளூர் மத்திய மாவட்டம் எல்லாபுரம் மத்திய ஒன்றியம் தகவல் தொழில் நுட்ப அணி சமூக வலைத்தளம் ஒருங்கிணைப்பாளர் செம்பேடு வி.செல்வம் எஸ். ரூபாவதி அவர்களின் இல்ல புதுமனை விழா ஒன்றிய கழக செயலாளர் கோடுவெளி எம். தங்கமுரளி தலைமையில் நடைபெற்றது திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்தினர். உடன் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் கழக இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதி உட்பட்ட பள்ளிப்பட்டு ஒன்றியம் கோணசமுத்திரம் கிராமத்தில் ரூபாய் 16 லட்சத்து 55 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையக் கட்டிடத்தை மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல்.ஏ. திறந்து வைத்தார் உடன் திருத்தணி தொகுதி பார்வையாளர் சண்முகநாதன், ஒன்றிய செயலாளர்கள் ஜி. ரவீந்தரா, என். கிருஷ்ணன், டி.எம். சுகுமார், பாரதி, கோபி, கோவிந்தசாமி, மோகன், கவாஸ்கர், உள்பட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்

### தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்'

# 'ஓரணியில் தமிழ்நாடு' தீர்மான ஏற்பு கூட்டம்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. அறிவிப்பு !



சென்னை,செப்.20-

தமிழ்நாட்டின் மண் மொழிமானம் காக்க மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் 68 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் 'ஓரணியில் தமிழ்நாடு' இயக்கத்தில் இணைந்துள்ள ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களால் முன்மொழியப்பட்டுள்ள 'தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்' என்ற தீர்மான ஏற்பு கூட்டம் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் ஆலோசனைப்படி வருகின்ற (21.09.2025 ஞாயிற்றுக்கிழமை ) நாளை மாலை 5 மணி அளவில் தருமபுரி BSNL அலுவலகம் அருகில் மாபெரும் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் இள.புகழேந்தி அவர்கள் சிறப்புரையாற்றவுள்ளார். அதுசமயம் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, ஊராட்சி கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA2, BDA, BLC நிர்வாகிகள் கழக தோழர்கள், பொதுமக்கள் என திரளாக கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

### கடலூர் மேற்கு மாவட்டக் கழகம் சார்பில்

# விருத்தாசலத்தில் "ஓரணியில் தமிழ்நாடு" தீர்மான ஏற்பு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்- அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை!



கடலூர் செப்.20-

"தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம். ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு கூட்டம்" விருத்தாசலத்தில் நடைபெறுவதை ஒட்டி கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் -அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலம் வானொலி திடலில் நாளை (21.09.2025- ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணி அளவில் கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளரும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரும் சி.வி.கணேசன் ஆகிய எனது தலைமையில் நடைபெறுகிறது. இந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் மண், மொழி, மானம் காக்க "தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம். ஓரணியில் தமிழ்நாடு" என்ற தலைப்பில் தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் செல்வி பத்மபிரியா சிறப்புரை ஆற்றுகிறார்.

இம்மாபெரும் கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் இன்னால் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, கிளை கழக, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கழக அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், தொ.மு.ச நிர்வாகிகள், முன்னாள், இன்னால் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும், தவறாது கலந்து கொண்டு பொதுக் கூட்டத்தை சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் சி.வி. கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### முன்னாள் அமைச்சர் க.பொன்முடி சிறப்புரை! தஞ்சை வடக்கு மாவட்டத்தில்

# 'ஓரணியில் தமிழ்நாடு' தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!



தஞ்சாவூர் செப்.20-

தஞ்சை வடக்கு மாவட்டத்தில் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பினை ஏற்று கும்பகோணத்தில் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : கழகத் தலைவர், திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பினை ஏற்று இன்று (20.09.2025) மாலை 06.00 மணியளவில் கும்பகோணம் காந்தியடிகள் சாலையில் (மார்னிங் ஸ்டார் பள்ளி அருகில்) "தமிழ்நாட்டை தலைக்குனிய விடமாட்டேன்" என்ற முழக்கத்துடன் தமிழக மக்களை ஒருங்கிணைத்து ஓரணியில் தமிழ்நாடு இயக்க தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

பொதுக்கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம், முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

முன்னாள் அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான முனைவர் க.பொன்முடி பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார். அதுசமயம் கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், கழக பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள் - இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள்,

கழக முன்னோடிகள் மற்றும் 'ஓரணியில் தமிழ்நாடு' இயக்கத்தில் கழகத்தில் இணைத்த கழக உறுப்பினர்கள் அனைவரையும், அழைத்து வந்து பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# மும்பை தி.மு.க. சார்பில் கழக முப்பெரும் விழா!

## பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு தலைமையில் நடைபெற்றது!

மும்பை, செப்.20-

மும்பை தி.மு.க. சார்பில் கழக முப்பெரும் விழா தாராவி கலைஞர் மாளிகை யில் பொறுப்புக்கழுத் தலை வர் ம. சேசுராசு தலைமை யில் நடைபெற்றது.

பொறுப்புக்குழு உறுப்பினர் மாறன் ஆரியசங்காரன் வரவேற்புரை யாற்றினார் தலைவர்களின் படங்களை பம்பாய் திருவள்ளுவர் மன்றம், மற்றும் கலைஞர் தமிழ்ச் சங்கம் செயலாளர் ஜேம்ஸ் தேவதாசன் திறந்து வைத்து மரியாதை செய்தார் இவ்விழாவில் மும்பை திமுக பொறுப்புக்குழு உறுப்பினர் அன்பழகன் பொற்கோ,மும்பை திராவிடர் கழகம் தலைவர் பெ.கணேசன் மராத்திய மாநில விசிக அமைப்பாளர் எஸ்.சாலமோன் ராஜா, திருமதி சுகுணா அன்பழகன், செல்வி க.அறிவுமதி திமுக மூத்த தலைவர் ,என்.வி.சண்முகராசன் ஜெரிமெரி தமிழ்ச் சங்கம் தலைவர் இல.முருகன், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ரவிகுணசீலன், தாராவி க. ராசன், ஓர்லி பகுதி செயலாளர் இரா.காந்தி, கொலாபா பகுதி செயலாளர் அப்துல்திவான் மைதீன், ஜவேரிபஜார் பகுதி செயலாளர் வே.ரவிச்சந்திரன் மலபார்குன்று செயலாளர் சேரை ச.பிரகாஸ், வக்கோலா பகுதி செயலாளர் சேலம் மா. சீனிவாசன், கோலிவாடா பகுதி செயலாளர் பி.இராமையா, பொய்சர் க.மூர்த்தி எம்.ராஜன் சுப.காளிமுத்து, தானே பகுதி கே.ஏ.ஜாகீர் உசைன்,

திராவிட கழக செயலாளர் ஜே.வின்சென்ட், திராவிட கழக பொருளாளர் பெரியார் பாலா, துணைத் தலைவர் ,இ.அந்தோணி, அ.கண்ணன், மனித நேயம் அமைப்பைச் சேர்ந்த சங்கர் திராவிட், கொலாபா தமிழ்ச் சங்கம் தலைவர் பன்னீர் செல்வம், ஜெரிமெரி கந்தசாமி, பாந்திரா பொன்.சுப்பிரமணியன், வரதராஜன், ராஜேந்திரன், பழனிசாமி, சுரேஸ் குமார், சி.குப்பன், கல்யாண சுந்தரம், சத்தியமூர்த்தி, பால்ராஜ், வீ.பன்னீர் செல்வம் பி. எஸ்.அழகுராஜாஅன்பில் ரஞ்சன் போன்ற ஏராள மானோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்

தாராவி தி.மு.க.வைச் சேர்ந்த ஆர்.ரவிரஜினி நன்றி கூறினார்.

### கழக மூத்த முன்னோடி

# கே.பாஸ்கரன் 65-வது பிறந்தநாள்!

## கழகத்தினர் வாழ்த்து!



சென்னை, செப்.20

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் அன்பை பெற்றவர், கழகம் நடத்திய அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கேற்ற கழக மூத்த முன்னோடி கே.பாஸ்கரன் அவர்களின் 65 ஆவது பிறந்தநாள் இன்று (20.9.2025), சனிக்கிழமை மதியம் 12.30 மணி அளவில் அவரது இல்லமான நெ.9, திருவேங்கட நகர், முதல் தெரு கந்தன்சாவடியில் பிறந்த நாள் விழா நடைபெறுகிறது.

இதில் கழக நிர்வாகிகள், குடும்பத்தினர் பலர் பங்கேற்று அவரை வாழ்த்துகின்றனர்.

கழக மூத்த முன்னோடி கே. பாஸ்கருக்கு மகள்கள் பா.சோபனாதேவி, ஜெ.ஸ்ரீதேவி, மகன் பா.முனுசாமி மற்றும் மருமகன்கள், பேரன்கள், பேத்திகள் உள்ளனர்.




சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்குப் பகுதி தி.மு.க. ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆணைப்படி, பகுதி துணைச் செயலாளர் பொ.த.எழில்வாணன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநிலத் தேர்தல் பணிக்குழுச் செயலாளர் வேளச்சேரி பெ.மணிமாறன் எம்.சி, த. ஜெகதீசன், எஸ்.தியாகராஜன், எம்.ஏ.சங்கர், ந.டில்லிகுமார், பொ.த.மதிவாணன், த.பார்த்திபன், கே.என். தாமோதரன், ஜி.பி.எஸ் பாலசதீஸ், தே.கோபி, எஸ்.முருகவேல், க.பாரதிதாசன், வி.சக்திவேல், மாவட்டக் கழகச் நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




தாம்பரம் மாநகரச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ்.சேகர் ஆகியோர் முன்னிலையில், 60வது வட்டக் கழக செயலாளர் ஆர்.சஞ்சீவி தலைமையில், தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி 60வது வட்ட கழக தி.மு.க சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது, இக்கூட்டத்தில் கழக அயலக அணி மாநில துணைச் செயலாளர், எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதிஇளம்சுருதி கலந்துகொண்டு வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய பணிகளை குறித்து ஆலோசனை வழங்கினார்.

### தலைமை; மயிலை த.வேலு! எஸ்.முரளி – நந்தனம் கி.மதி – கே.ஏழுமலை முன்னிலை!

# சென்னை தென்மேற்கு மாவட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்புக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் எஸ்.ஆர். ராஜா சுரேஷ்குமார் அறிக்கை!

சென்னை,செப்.20-

122-வது வட்ட தி.மு.க. வட்ட செயலாளர் எஸ்.ஆர். ராஜாசுரேஷ்குமார் அறிக்கை வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக சார்பில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்! ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு கூட்டம் 21.09.2025, ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணியளவில், சிலேட்டர் புரம், மயிலாப்பூரில்

தென்மேற்கு மாவட்டக்கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு தலைமையில், மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ் முரளி, மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி மதி M.C., தியாகராய நகர் மேற்கு பகுதி செயலாளர் கே ஏழுமலை அவர்கள் முன்னிலையில், திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் சிறப்புரை ஆற்றுகிறார்.

இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, பகுதி, கழக நிர்வாகிகள், மாவட்ட பிரிதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

இந்கூட்டத்திற்கு 122-வது வட்டத்திற்குட்பட்ட மாவட்ட பிரிதிநிதிகள், மாவட்ட, பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்கள் , பாக உறுப்பினர்கள், பாக தகவல் தொழில் நுட்ப அணி, பாக இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் கழக தோழர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென 122-வது வட்ட தி.மு.க. வட்ட செயலாளர் எஸ். ஆர். ராஜாசுரேஷ்குமார் அறிக்கை விடுத்துள்ளார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட கிளை கழகங்களின் ஆய்வு கூட்டம் ஒன்றிய பொறுப்பாளர் மு.முரளிதரன் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் கலந்து கொண்டு மினிட் புத்தகங்களை ஆய்வு மேற்கொண்டு வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் சிறந்த முறையில் பணியாற்றுவது குறித்தும் பொதுமக்களை சந்திப்பது குறித்தும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார் அருகில் தொகுதி பார்வையாளர் சுரேஷ் செல்வராஜ் மாவட்ட அவைத்தலைவர் மு.பகலவன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் முகமது அவில், முன்னாள் மாவட்ட பிரதிநிதி பா.து. தமிழரசன் உள்பட கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்



தாம்பரம் மாநகராட்சி பெருங்களத்தூர் தெற்கு பகுதி வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் என். ராஜா – சூரிய குமாரி இவர்களது இல்ல மணவிழாவில் பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் மாமன்ற உறுப்பினருமான எஸ். சேகர் எம் .சி , தெற்கு பகுதி துணை செயலாளர் பி. புகழேந்தி எம் .சி, கணேசன், குமரவேல், ஐசக், ஜெயதுரை. மற்றும் கழக முன்னோடிகள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.